# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ)

# பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY)

**1.இந்த திட்டத்தின் தன்மைகள் என்ன ?**

இந்த திட்டமானது ஒரு வருடத்திற்கு ஆயுள் காப்புறுதி வழங்கும். மேலும் ஒவ்வொரு வருடமும் காப்புறுதி கட்டணம் செலுத்தும் போது புதுப்பிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் எந்த வகையிலாவது இறப்பு ஏற்படும் போது காப்பீடு வழங்கும் வகையில் இருக்கும்.

**2. திட்டத்தின் நன்மைகள் மற்றும் காப்பீட்டுக் கட்டணம் ?**

சந்தாதாரரின் இறப்பு எந்த வகையிலாவது ஏற்படும் போது காப்பீட்டு தொகை ரூ 2 லட்சம் வழங்கப்படும். சந்தாதாரர் காப்பீட்டுக் கட்டணமாக ஆண்டிற்கு ரூ 330 செலுத்த வேண்டும்.

**3. காப்பீட்டுக் கட்டணம் எவ்வாறு வசூலிக்கப்படுகிறது ?**

காப்பீட்டுக் கட்டணமானது சந்தாதாரரின் ஒப்புதல் மற்றும் உறுதி மொழி படிவத்தில் குறிப்பிட்டது போல வங்கிக் கணக்கில் இருந்து "ஆட்டோ டெபிட்" முறை மூலம் ஒரே தவணையாகப் பெறப்படும். சந்தாதாரர் ஒவ்வொரு வருடமும் பணம் பெறுவதற்கான ஒப்புதல் படிவம் கொடுத்து விட்டால்,மறுவரையறை செய்யும் வரை இத்திட்டமானது அமலில் இருக்கும்.

**4.காப்பீட்டு திட்டத்தை வழங்குவது / நிர்வகிப்பது யார் ?**

இந்த திட்டமானது எல்,ஐ.சி மூலம் நிர்வகிக்கப்பட்டு வழங்கப்படுகிறது எனினும் பிற காப்பீட்டு நிறுவங்கள் விரும்பினால் இதே போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் வங்கிகளுடன் புரிந்துர்ணர்வு ஒப்பந்தம் செய்து வழங்கலாம். வங்கிகள் தாங்கள் விரும்பும் எந்த ஒரு காப்பீட்டு நிறுவனத்துடனும் இணைந்து இச்சேவையை வழங்கலாம்.

**5. இத்திட்டத்தில் சேர தகுதி என்ன ?**

வங்கிகளில் கணக்கு வைத்துள்ள 18 வயது முதல் 50 வயது வரை உள்ள அனைத்து நபர்களும் இத்திட்டத்தில் சேரலாம். ஒருவர் ஒன்று அல்லது பல வங்கிகளில் கணக்கு வைத்திருந்தால் ஒரே ஒரு வங்கி கணக்கு மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

6. **சேர்க்கை நடைமுறை**

காப்பீட்டுக் காலம் 1 ஜூன் முதல் 31 மே வரை ஒரு வருடத்திற்கு நடைமுறையில் இருக்கும், அதன் பிறகு ஒவ்வொரு வருடமும் ரூ 330 சந்தாதாரரின் வங்கிக் கணக்கிலிருந்து ஆட்டோ டெபிட் மூலம் பெறப்படுவதன் மூலம் புதுப்பித்துக் கொள்ளலாம்.

இத்திட்டத்தில் இருந்து வெளியேறும் நபர்கள் தாங்கள் விரும்பினால் எப்போது வேண்டுமானாலும் உடற்தகுதி பற்றி சுய சான்றிதழ் சமர்பித்துச் சேர்ந்து கொள்ளலாம்.

புதியவர்கள் இத்திட்டத்தில் சேர்வதற்கான தகுதியை அடையும் போதும் மேலும் இத்திட்டத்தில் சேராத தகுதி உள்ளவர்கள் மற்றும் ஏற்கனவே சேர்ந்து வெளியேறியவர்கள் தாங்கள் விரும்பினால் எப்போது வேண்டுமானாலும் உடற்தகுதி பற்றி சுய சான்றிதல் சமர்பித்துச் சேர்ந்து கொள்ளலாம்.

**7. தகுதியான நபர்கள் திட்டத்தின் துவக்கத்தில் சேராமல் அடுத்த வருடங்களில் சேர்ந்து கொள்ள முடியுமா ?**

ஆம், ஆட்டோ டெபிட் முறை மூலம் காப்பீட்டுக் கட்டணம் செலுத்தி, உடற்தகுதி பற்றிய சுய சான்றிதழ் அளிப்பதன் மூலம் சேர்ந்து கொள்ளலாம்.புதியவர்கள் இத்திட்டத்தில் சேர்வதற்கான தகுதியை அடையும் போது காப்பீட்டுக் கட்டணம் செலுத்தி, உடற்தகுதி பற்றிய சுய சான்றிதழ் அளிப்பதன் மூலம் சேர்ந்து கொள்ளலாம்.

**8. இந்த திட்டத்தில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் இந்த திடத்தில் சேர முடியுமா ?**

இந்த திட்டத்தில் இருந்து வெளியேறிய நபர்கள் மீண்டும் சேர விரும்பினால் உரிய காப்பீட்டுக் கட்டணம் மற்றும் உடற்தகுதி பற்றி சுய சான்றிதழ் சமர்பித்துச் சேர்ந்து கொள்ளலாம்.

**9. இந்த திட்டத்தின் மாஸ்டர் பாலிசி யாரிடம் இருக்கும் ?**

திட்டத்தில் பங்கேற்கும் வங்கிகளிடம் மாஸ்டர் பாலிசி இருக்கும். எளிதான அனைவருக்கும் புரியும் வகையில் வங்கிகளின் ஆலோசனையுடன் கோரிக்கை செயல்முறைகளை எல்.ஐ.சி / காப்பீட்டு நிறுவங்கள் முடிவு செய்யும்.

**10. இந்த திட்டம் எப்போது முடிவுக்கு வரும் ?**

ஒரு உறுப்பினருக்கு அளிக்கப்பட்ட காப்புறுதி கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு நிகழ்வின் போது முடிவுக்கு வரும்.

I. உறுப்பினருக்கு 55 வயது பூர்த்தியாகும் போது

II. உறுப்பினரின் வங்கிக் கணக்கு ரத்து செய்யப்படும் போது / புதுப்பித்தலுக்கான காப்பீட்டு கட்டணம் வங்கி கணக்கில் இல்லாத போது

III. உறுப்பினர் ஒன்றிற்கு மேற்பட்ட வங்கி கணக்கிலிருந்து காப்பீட்டுக் கட்டணம் செலுத்தினால் காப்பீட்டு தொகை ரூ 2 லட்சம் மட்டும் வழங்கப்படும்.

**11. வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் பங்கு என்ன ?**

இந்த திட்டமானது எல்,ஐ.சி மூலம் நிர்வகிக்கப்பட்டு வழங்கப்படுகிறது எனினும் பிற காப்பீட்டு நிறுவங்கள் விரும்பினால் வங்கிகளுடன் புரிந்துர்ணர்வு ஒப்பந்தம் செய்து வழங்கலாம்.

வங்கியானது உறுப்பினர்களின் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டபடி காப்பீட்டுக் கட்டணத்தை ஒரே தவணையாக சந்தாதாரரின் வங்கி கணக்கிலிருந்து ஆட்டோ டெபிட் மூலம் கழித்து காப்பீட்டு நிறவனத்தின் வங்கி கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

உறுப்பினரின் சேர்க்கை விண்ணப்பம்,ஒப்புதல் படிவம் மற்ற படிவங்களைப் பெற்று பங்கேற்கும் வங்கிகள் தாங்கள் பொறுப்பில் வைத்துக் கொள்ளவேண்டும்.கோரிக்கை விண்ணப்பம் பெறப்பட்டால்

எல்.ஐ.சி / காப்பீட்டு நிறுவனத்திடம் மேற்குறிப்பிட்ட படிவங்களை சமர்பிக்க வேண்டும், எல்.ஐ.சி / காப்பீட்டு நிறுவனங்கள் எப்போது கேட்டாலும் மேற்குறிப்பிட்ட படிவங்களை வங்கி சமர்பிக்க வேண்டும்.

12. **காப்பீட்டுக் கட்டணம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது ?**

- எல்.ஐ.சி / பிற காப்பீட்டு நிறுவனங்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் : ரூ 289 (ஒரு ஆண்டிற்கு / ஒரு உறுப்பினர் )
- வங்கி தொடர்பாளர் / பிரதிநிதிக்கான ஊக்க தொகை : ரூ 30 ( ஒரு ஆண்டிற்கு / ஒரு உறுப்பினர் )
- பங்கேற்கும் வங்கிக்கு அளிக்கப்படும் தொகை : ரூ 11 ( ஒரு ஆண்டிற்கு / ஒரு உறுப்பினர் )

13. வேறு காப்பீட்டு திட்டங்களில் சேர்ந்துள்ளவர்கள் இந்த திட்டத்தில் சேர முடியுமா ?

ஆம். முடியும்